மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDARM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

Double-Blind Peer-Reviewed | Open Access

E-ISSN: 3049-3676 (ONLINE)

Bimonthly | Online Publication | Tamil Language

Published: 23.08.2026

Volume 9 | Issue 9 | July – August 2026

History and Imagination in Devibharathi's Works

A. RAJALAKSHMI

(PHDTAM25F035), Full Time Research Scholar,

PG & Research Center of Tamil,

Mother Teresa Women's University, Kodaikanal-624 101,

Jayaraj Annapackiam College for Women(Autonomous), Periyakulam - 625 601,

Mail.ID- rajimtwu200@gmail.com, Phone.No – 9486828371.

ORCiD: 0009-0002-9387-3902.

Dr. J. ARUL IRUDAYA JEYANTHI
Associate professor, PG & Research Center of Tamil,
Jayaraj Annapackiam College for Women (Autonomous),
Periyakulam - 625 601. ORCiD: 0009-0008-7640-5510.

ABSTRACT

The way history and imagination are intertwined in Devi Bharathi's novels demonstrates a very important trend in contemporary Tamil literature. Her writings are not mere historical documents or purely fictional stories. Rather, they are a subtle work of creation that fills in the missing pages of history with the aid of imagination. This article also shows how the imaginations that arise in one's mind in every situation of life should be able to guide oneself. Although the creator creates his work by comparing the events that he thinks of with the history of human life, he believes that the work will be complete when he expresses his imagination along with it. Through his works, he records history and explores the hidden side of history, the idea of reconstructing that history, and the impact of history on a person's life. In this way, this article examines the biographical technique of blending history and imagination that is revealed in Devi Bharathi's works through the following topics: historical reconstruction, contemporary and autobiographical records, imagination, imagination from the perspective of critics, types of imagination, conceptual imagination, and imagination expressed by characters.

Keywords: History, Imagination, Reconstruction, Consequences, Life, Ability.

தேவிபாரதியின் படைப்புகளில் வரலாறும் கற்பனையும்

ஆய்வாளர் ஆ. ராஜலெட்சுமி

(PHDTAM25F035), முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலைத் தமிழ் உயராய்வு மையம்,
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல் – 624 101
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
பெரியகுளம் - 625 601 மின்னஞ்சல் - rajimtwu200@gmail.com,
தொலைப்பேசி எண் – 9486828371

நெறியாளர் முனைவர்.ஜெ. அருள் இருதய ஜெயந்தி,

இணைப் பேராசிரியர், முதுகலைத் தமிழ் உயராய்வு மையம்,
ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
பெரியகுளம் - 625 601

ஆய்வுச் சுருக்கம்

தேவிபாரதியின் நாவல்களில் வரலாறும் கற்பனையும் பிணைந்துள்ள விதம், தற்காலத் தமிழ் இலக்கியத்தில் மிக முக்கியமான ஒரு போக்கைக் காட்டுகிறது. அவரது எழுத்துக்கள் வெறும் வரலாற்று ஆவணங்களோ அல்லது முற்றிலும் கற்பனையான கதைகளோ அல்ல. மாறாக, வரலாற்றின் விடுபட்ட பக்கங்களை கற்பனையின் துணை கொண்டு நிரப்பும் ஒரு நுட்பமான படைப்பாக்கமகாக அமைந்துள்ளது. வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தனகுள் தோன்றும் கற்பனைகள் தன்னைத் தானே எவ்வாறு நல்வழிப்படுத்திக் கொள்ளும் திறனாக இருத்தல் வேண்டும் என்பதையும் இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது. மானுடர்களின் வாழ்க்கையில் அமைந்துள்ள வரலாற்றையும் படைப்பாளன் தான் நினைக்கின்ற நிகழ்வுகளை மனிதர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டும் தன் படைப்பை உருவாக்குகிறான் என்றாலும் தன் கற்பனைகளையும் சேர்த்து வெளிப்படுத்தும் போது படைப்பானது முழுமை பெறும் என்று நம்புகிறான். தன் படைப்புகள் வழி வரலாற்றை பதிவு செய்து வரலாற்றில் மறைக்கப்பட்டப் பக்கத்தையும் அவ்வரலாற்றின் மீட்டுருவாக்கச் சிந்தனையையும் ஒரு மனிதனின் வாழ்வில் வரலாற்றின் தாக்கத்தையும் ஆராயப்படுகிறது. அவ்வகையில் தேவிபாரதியின் படைப்புகளில் வெளிப்படும் வரலாறும் கற்பனையும் கலந்த வாழ்வியல் நுட்பத்தை வரலாறு மீட்டுருவாக்கம்,

சமகாலமும் சுயசரிதையும் காட்டும் பதிவுகள், கற்பனைகள், திறனாய்வாளர்களின் பார்வையில் கற்பனை, கற்பனையின் வகைகள், கருத்து விளக்கக் கற்பனை, கதாப்பாத்திரங்கள் வெளிப்படுத்தும் கற்பனை, கௌதமன் மகன் உருவ அமைப்பு, விளைவுகளைக் கற்பனை செய்து பார்த்தல் ஆகியத் தலைப்புகளின் வழி இக்கட்டுரை ஆராயப்படுகிறது.

திறவுச் சொற்கள்: வரலாறு, கற்பனை, மீட்டுருவாக்கம், விளைவுகள், வாழ்க்கை, திறன்.

முன்னுரை

தேவிபாரதியின் நாவல்களில் வரலாறும் கற்பனையும் பிணைந்துள்ள விதம், தற்காலத் தமிழ் இலக்கியத்தில் மிக முக்கியமான ஒரு போக்கைக் காட்டுகிறது. அவரது எழுத்துக்கள் வெறும் வரலாற்று ஆவணங்களோ அல்லது முற்றிலும் கற்பனையான கதைகளோ அல்ல. மாறாக, வரலாற்றின் விடுபட்ட பக்கங்களை கற்பனையின் துணை கொண்டு நிரப்பும் ஒரு நுட்பமான படைப்பாக்கமாக அமைந்துள்ளது. படைப்பாளர் என்பவர் தன்னைச் சுற்றி நிகழும் எல்லா நிகழ்வுகளையும் உற்றுநோக்குபவராக உள்ளார். அந்த வகையில் தேவிபாரதி அவர்கள் தன் காலத்தில் நடந்த நிகழ்வுகளை தன் படைப்புகளில் வெளிப்படுத்தி உள்ளதோடு தன்வயப்படுத்தியும் சமூக பிரக்ஞையோடும் வாழ்வின் இன்றியமையாத இன்ப துன்ப நிலைகளையும் படைப்புகளில் வெளிப்படுத்த முயற்சித்துள்ளார். சமூகங்களில் நடக்கின்ற நிகழ்வுகளை எடுத்துக்காட்டுபவன் எழுத்தாளன். அந்த வகையில் படைப்பாளர் தான் வாழ்ந்த வாழுகின்ற காலநிலைகளையும் கடந்து

வந்த பாதைகளையும் படைப்பு மொழி மூலமாக வெளிப்படுத்துகிறார். மனிதர்களின் வாழ்க்கையே ஒரு போராட்டம் நிறைந்ததுதான் என்றாலும் அன்றாட வாழ்க்கையில் மனிதன் சகமனிதனைச் சார்ந்துதான் வாழ வேண்டியுள்ளது. மனிதர்கள் இயல்பாகவே இரக்கக்குணம் உடையவர்கள். சிலர் அதற்கு எதிரானவர்களாக உள்ளனர். ஆனால் மனிதச் செயல்பாடுகளில் ஒன்றிணைந்து செயல்படுவதே மானுடத்திற்கு நன்மை பயக்கும் காரணியாகும். மானுடர்களின் வாழ்க்கையில் அமைந்துள்ள வரலாற்றையும் படைப்பாளன் தான் நினைக்கின்ற நிகழ்வுகளை மனிதர்களின் வாழ்க்கையோடு ஒப்பிட்டும் தன் படைப்பை உருவாக்குகிறான் என்றாலும் தன் கற்பனைகளையும் சேர்த்து வெளிப்படுத்தும் போது படைப்பானது முழுமை பெறும் என்று நம்புகிறான். அவ்வகையில் தேவிபாரதியின் படைப்புகளில் வெளிப்படும் வரலாறும் கற்பனையும் கலந்த வாழ்வியல் நுட்பத்தை இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது.

வரலாறு மீட்டுருவாக்கம்

தேவிபாரதி வரலாற்றை அப்படியே ஏற்றுக்கொள்வதில்லை. அதிகாரப்பூர்வமான வரலாற்றுப் பதிவுகளில் விடுபட்டுப்போன விளிம்புநிலை மனிதர்கள், சாமானியர்கள் மற்றும் பெண்களின் பார்வையில் இருந்து வரலாற்றை அணுகுகிறார். அவரது நிழலின் தனிமை , நட்ராஜ் மகராஜ், நட்டநடு இரவில் போன்ற படைப்புகளில் வரலாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பெருவரலாறுகளைப் பேசுவதை விட, ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின், குறிப்பாக கொங்கு மண்டலம் மற்றும் ஈரோடு சுற்றுவட்டாரப் பகுதிகள் சமூக வரலாற்றையும், அங்குள்ள மக்களின் வாழ்வியல் மாற்றங்களையும் பதிவு செய்கிறார்.

வரலாறு என்பது ஏற்கனவே நடைபெற்ற, நடைபெற்று முடிந்த நிகழ்வை வைத்து எழுதப்படுவதாகும். எல்லோராலும் அறியப்பட்ட நிகழ்வாகக் காட்டலாம். ஆனால் ஒவ்வொரு முறையும் நினைத்துப் பார்த்தால் புதிதாக படிப்பது போன்ற நிகழ்வே நடக்கின்றது. தேவிபாரதி அவர்கள் நெசவாளர்களின் வாழ்க்கை நிலையினையும், ஒரு அரசரின் வரலாற்றையும் அவ்வரலாறு காலங்கள் செல்லச் செல்ல மாற்றி அமைந்ததையும் அரசியலில் ஏற்பட்டிருக்கின்ற நிகழ்வுகளையும், சுயசரிதைப் போன்ற நிகழ்வுகளையும் படைத்துக் காட்டியுள்ளார்.

சமகாலமும் சுயசரிதையும் காட்டும் பதிவுகள்

சமகால வரலாற்றினை வரலாறு என்பதற்குள் அடக்க முடியாது. பலரும் வரலாற்றை எழுதுவதற்குத் தயங்குகின்றனர். காரணம் வரலாற்றின் செய்திகளை முழுமையும் எழுதிவிட முடியாது. ஒரு சில செய்திகள் விடுபட்டுப் போவதற்கும் வாய்ப்புள்ளது. அதேபோல எல்லா வரலாறுகளும் வரலாறு என்ற வகையிலே சேர்க்கவும் முடியும். இதனைச் சமகால 'வரலாறு' என்பதின் அடிப்படையில் குறிப்பிடலாம்.

1789 முதல் 1914 வரையிலான உலக வரலாற்றை மூன்று பகுதிகளாக எழுதிய பிரிட்டிஷ் மார்க்சிய வரலாற்றாளர் எரிக்ஹாப்ஷ்பாம், 1914க்கும் பிந்தைய வரலாற்றை எழுதத்தலைப்பட்ட பொழுது பெருந்தயக்கம் கொள்ளவே செய்தார். சுயசரிதைப் பாங்கில் சமகால வரலாற்றை அணுகுவது ஒருமுறை இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றை The Age of extremes. The short Twentieth Century என்று எழுதிய ஹாப்ஸ்பாம். அதே காலகட்டத்தை Interesting Times

என்ற தம் சுயசரிதையிலும் கையாள்கிறார். இந்த இரண்டு நூல்களும் ஒன்றையொன்று முழுமைப்படுத்துகின்றன என்று சொல்லலாம்.

“எல்லா வரலாறுகளும் சமகால வரலாறு என்பதின் படைப்பாகவே உள்ளன. புழுதிக்குள் சில சித்திரங்கள் என்ற கவிதைத் தொகுப்பு வரலாற்றை மேன்மைப்படுத்தி வரலாற்று தகவலின் மீட்டுருவாக்கமாக காட்டுகிறது. சுயசரிதையும் இவற்றின் அடிப்படையிலே அமைந்துள்ளன என்று வகைப்படுத்திக் காட்டுகிறார் தேவிபாரதி” (தேவிபாரதி, புழுதிக்குள் சில சித்திரங்கள், ப.9).

வரலாறு மாறுபடுவதற்குக் காரணம் சமூகங்கள் வேறு இடத்திற்கு மாறுவதுதான். பிழைப்புக்காக வேறு இடங்களுக்குச் சென்று தங்கி, அங்கே உள்ள கலாச்சாரங்களைக் கற்றுக் கொள்கின்றனர். தமிழகத்தில் நெசவுசமூகங்களின் குடிபெயர்வை தேவிபாரதி **“பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளில் ஜவுளித் தொழிலில் ஏற்பட்ட செழிப்பு, பல்வேறு மொழிபேசும், பல்வேறு சாதிகளைச் சேர்ந்த நெசவுச் சமூகங்களின் குடிபெயர்வு தமிழகத்தில் ஏற்படக் காரணமானது, உழவுச்சமூகங்களின் வாழ்க்கை பதிவான அளவுக்குத் தமிழ் இலக்கியத்தில் நெசவுச் சமூகங்களின் வாழ்க்கை பதிவாகவில்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்” (மேலது, ப.9.)** என்று குறிப்பிடுகிறார். வேறு இடங்களுக்குச் செல்லும் போது மொழியும் பண்பாடும் மாறுபடச் செய்கின்றது கலாச்சாரங்களும் மாறுபடுகின்றது. சமகால வரலாற்றுக்கும் சுயசரிதைக்கும் இடைப்பட்ட ஒரு வெளியைத் தேவிபாரதி தனதாக்கிக் கொண்டுள்ளார். சித்தரிப்புகளுடன் சொல்லாமலே உணர்த்தும்

பாங்கும் அவரிடம் இழையோடுகிறது. வலுவான தமிழ்நடை கைவந்ததில் சற்று உரக்கவே அவர் பேசுகிறார்.

“வரலாறு எல்லாவற்றையும் சரி செய்யும், வரலாற்றின் கணக்கு உரியவர்களால் உரிய விதத்திலேயே வரலாற்றின் கணக்கு சரி செய்யப்படும் என்று நாவலில் வெவ்வேறு தொனியில் திரும்ப திரும்ப இடம்பெறும் வாசகம் முக்கியக் கதைமாந்தர்களின் கூற்றாகவும் அதன் விளைவாக முதன்மைப் பாத்திரமான ‘ந’வின் உட்கிடக்கையாகவுமே மாறுகிறது” (**தேவிபாரதி, நட்ராஜ் மகராஜ், ப.9**) என்று வரலாறு பற்றி விவரிக்கின்றார். வரலாறானது எல்லா நிகழ்வுகளையும் சரிசெய்யும் வரலாற்று கணக்கும் சரிசெய்யப்படும், அதற்கான காலநிலை ஏற்படும்போது தானே எல்லாமும் சரியாகும் என்கிறார் தேவிபாரதி.

‘நட்ராஜ் மகராஜ்’ என்னும் நாவலில் நிறைய இடங்களில் வரலாற்று நிகழ்வுகளையே பயன்படுத்தியுள்ளார். கதைகள் சொல்லப்படும்போதோ கதை மாந்தர்களின் வழியாகத்தான் எடுத்துரைக்க முடியும். பழைய நிகழ்வினை மறுபடியும் எடுத்துக்காட்டும்போது தானே எல்லாம் சரியாகிவிடும். ஆனால் மறுக்கப்பட்ட நிகழ்வுகள் மீட்டுருவாக்கம் அடையும் வரை சூழ்நிலையை பொருத்துக்கொண்டு அதற்கான காலத்தை மனிதர்கள் தங்கள் வாழ்வில் அனுசரிக்க வேண்டும் என்பதை தேவிபாரதி சுட்டிக்காட்டுகிறார்.

‘ந’ என்ற கதைமாந்தரை முதன்மைப்பாத்திரமாக வைத்து நாவல் வழி கூறமுற்படும் வரலாற்றின் கதைக்கருவை எடுத்துரைத்துள்ளார் தேவிபாரதி. தான் ஒரு அரச பரம்பரையைச் சார்ந்தவன் என்றும்,

அரண்மனை தன்னுடையது என்றும், தன்னுடைய முன்னோர்கள் பொருட்களை வாரி வழங்கியவர்கள் என்றும் புராண நிகழ்வினை பலருக்கும் கூறிவருகின்றான். கடைசியில் நாடகமேடையில் தன்னைப் போல நிறைய பேர் அரசனாக வேடம் கட்டி நடித்துள்ளனர் என்பதைக் கண்டு ஏமாற்றமடைகின்றான் 'ந'.

மாவீரன் காளியங்க நடராஜ மகாராஜாவின் வரலாற்றைப் பற்றி ஆராய்ந்த வெளிநாட்டு ஆய்வாளர் பிரபலமான நாளிதழில் கட்டுரையை வெளியிட்டுள்ளார். அதில் காளிங்க நடராஜ் மகாராஜாவின் ஒரே வாரிசு சத்துணவு அமைப்பாளராக வேலை செய்பவராக உள்ளார் எனவும், மனைவியைப் பற்றியும் கட்டுரை வெளியானது கண்டு வருத்தமடைகிறான் 'ந'. தன் வாழ்வு கட்டுரையாக்கப்பட்டதைவிட தன்னுடைய வரலாறு தனக்கு பெருமையை அளிக்காமல் கேலிசித்திரமாக்கப்பட்டதை பற்றி வருந்துவதாக அமைந்துள்ளது. மறைந்துபோன வரலாறு பல தலைமுறை கழிந்து மீண்டும் கண்டறியும் போதும் அவற்றின் சிறப்பினை அறியும் போதும் ஒரு மனிதனின் வாழ்வில் அவற்றின் தாக்கம் மகிழ்வாக அமைவதை விட அன்றைய மனிதர்களைப் பற்றி அறியும் வாழ்வியல் கற்றலாக அமைகிறது.

நாட்டின் முதலாவது **"சுதந்திரப் போராட்ட வீரர்களில் ஒருவனான மாவீரன் காளிங்க நடராஜ மகாராஜாவின் புதையுண்ட வரலாற்றைப் பற்றியும் அது மீட்டெடுக்கப்பட்டதைப் பற்றியும் அதன் துரோகத்தைப் பற்றியும் அது இழைத்திருக்கும் அநீதியைப் பற்றியும் இடம் பெற்றிருந்த பெருமிதமூட்டும் தகவல்களும் நேரடியான உயிருள்ள ஒரே வாரிசின் 'ந' என்னும் பெயரையுடைய சத்துணவு அமைப்பாளரைப் பற்றியும் அவனுடைய பட்டத்து ராணி 'உ' வைப்**

பற்றியும் மனதைப் பிழியும் சில கதைகளும் அந்தக் கட்டுரையில் இடம்பெற்றிருந்தன" (மேலது, ப.217.) என தேவிபாரதி விவரிக்கின்றார். 'ந' வோ வரலாறு மீட்டெடுக்கப்படப் போகிறது என மகிழ்ச்சியோடு இருக்கின்றான். ஆனால் கட்டுரையிலே வேறு நிகழ்வுகளையும் சேர்த்து கதைகளும் இடம் பெற்றிருப்பது 'ந'விற்கு ஏமாற்றத்தினைத் தருகிறது. ஆய்வாளன் வரலாற்றினைப் பற்றிக்கேட்டுவிட்டு வேறுநிகழ்வினையும் சேர்த்துக்கட்டுரையில் வெளியிட்டுள்ளார்.

வரலாறு யாராலோ புதைக்கப்படுகிறது அதை மீட்டெடுக்க யாராவது வருவர் என விளக்குகின்றார் தேவிபாரதி. வரலாறு மீண்டும் புதைக்கப்பட்டுவிட்டதாக கதாப்பாத்திரத்தின் வழி விளக்குகின்றார். நட்ராஜ் மகராஜ் எனக் கற்பனை செய்து கொள்வதைவிட வேறு எதுவுமே நிச்சயம் பயங்கரமானதல்ல என நினைத்தான் அந்தச் சத்துணவு அமைப்பாளர் உண்மையில் மகத்தான அந்த வரலாறு 'ந' என்பவனுக்காகவோ 'ந' என்னும் பெயரையுடைய சத்துணவு அமைப்பாளருக்காகவோ மீட்கப்படவில்லை. அவன் பொருட்டு அது புதையுண்டு போகவில்லை. வேறு யாராலோ, எதற்காகவோ புதைக்கப்பட்டிருக்கிறது, மீட்கப்பட்டிருக்கிறது. பல ஆண்டுகால வரலாறு புதைக்கப்பட்டிருந்ததை வெளிகொணர அவ்வரலாற்றின் சான்றாக உள்ள மனிதன் பயன்படுத்தப்படுகிறான் என்பதையும் அதனால் உண்டாகும் அவன் வாழ்வின் தாக்கத்தையும் வெளிக்காட்டுகிறது.

"வரலாறு மற்றொரு முறையும் புதைக்கப்பட்டுவிட்டது என நினைத்தான் ந" (மேலது, ப.318) என்று விளக்குகின்றார். 'ந' என்னும்

கதைமாந்தரை மையமாக வைத்தே வரலாறு எவ்வாறு மீட்டெடுக்கப்பட்டது என்றும் அதே வரலாறு மீண்டும் புதைக்கப்பட்டதையும் எடுத்துரைக்கின்றார். வரலாறு என்பது யாராலோ, எவராலோ மறைக்கப்படலாம், மீட்டெடுக்கவும் படலாம் எனவும் படம்பிடித்துக் காட்டியுள்ளார் தேவிபாரதி.

படைப்பாளன் இலக்கியங்களைப் படைக்கும் போது, எல்லா நிகழ்வுகளையும் சொல்லவேண்டிய அவசியம் இருக்காது. ஒரு இடத்தில் சொல்லப்பட்ட கருத்தினை பல இடங்களிலும் அந்த கருத்தினையோ அல்லது எண்ணத்தையோ மீண்டும் மீண்டும் சொல்லலாம். கதைமாந்தரை மையமாக வைத்து பல இடங்களிலும் சென்று வரலாம். நிறைய இடங்களில் கதாப்பாத்திரத்தின் பெயரே திரும்ப இடம் பெற்றிருக்கும். வரலாற்றின் கதையை எடுத்துரைக்கும் போது மன்னர்களின் வாரிசுகள் இன்றும் வாழ்வதற்கு சாத்தியக்கூறுகள் உண்டு. அதன்படியே 'நட்ராஜ் மகாராஜ்' என்னும் புதினத்தில் தேவிபாரதி அவர்கள் 'ந' என்பவன் கதாநாயகன். அவனின் வரலாறு சொல்லப்பட்டதாக எடுத்துரைக்கின்றார். அதேபோல் அவனின் தாத்தா காளிங்க நடராஜ மகாராஜாவின் நேரடியான உயிருள்ள ஒரே வாரிசு எனவும் அறிமுகம் செய்கிறார். இதனை,

“ந என்பவன் வெறும் ‘ந’வோ ‘ந’என்னும் பெயரையுடைய சத்துணவு அமைப்பாளரோ அல்ல. தேசத்தின் முதல் சுதந்திரப் போராட்ட வீரன் மாவீரன் காளிங்க நடராஜ மகாராஜாவின் நேரடியின் உயிருள்ள ஒரே வாரிசு எனப் பேராசிரியர் பூ அறிவித்த பிறகும்கூட அவனால் அந்த இரவை மறக்க முடியவில்லை” (**மேலது, ப.**71) என அறிமுகம் செய்கிறார். வரலாற்றினை ஆய்வு

செய்து வந்தவர்தான் பேராசிரியர் பூ என்பவர். ந என்பவன் காளிங்க நடராஜ மகாராஜாவின் ஒரே வாரிசு என எத்தனை முறைக் கூறினாலும் ஊர் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. பேராசிரியர் சொன்ன பிறகுதான் அப்படி இருக்குமோ என எண்ணுகின்றனர். கடந்த காலத்தை சமகாலத்தின் கண்கொண்டு பார்ப்பதும் பகுப்பாய்வதுமே வரலாறு ஆகும். எல்லா வரலாறுகளும் சமகால வரலாறு என்பதின் படைப்பாகவே உள்ளன. வரலாறு எல்லாவற்றையும் சரி செய்யும் வரலாற்றின் கணக்கு சரிசெய்யப்படும் என்பதை பல இடங்களில் பயன்படுத்தியுள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.

கற்பனைகள்

கற்பனை என்பது நேரில் பார்க்காத, உண்மையற்ற, அனுபவிக்காத, நிஜத்தில் நிகழாத விஷயங்களை மனதிற்குள் மட்டும் காட்சிகளாகவும் எண்ணங்களாகவும் உருவாகும் மனப்படைப்புத் திறன் கற்பனை ஆகும். நமக்குக் கிடைத்த பழமை வாய்ந்த இலக்கிய, இலக்கண நூல்களான சங்க இலக்கியம், தொல்காப்பியத்திலும்கூட கற்பனை என்னும் சொல், எங்கும் பயன்படுத்தப்படவில்லை. திருமந்திரத்தில்தான் முதன்முதலாக கற்பனை என்னும் சொல் இடம் பெறுகிறது.

“கற்பனை யற்றக் கனல்வரியே சென்ற” (திருமந்திரம்-608)

“கழிந்த கற்பனை நாளும் குறுகி” (திருமந்திரம்-118)

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

திறனாய்வாளர்களின் பார்வையில் கற்பனை

கற்பனை என்ற தமிழ்ச் சொல் ஆங்கிலத்தில் Imagination என்று வழங்கப்படுகிறது. ரிச்சட்ஸ் என்ற அறிஞர் கற்பனையை உணர்த்தும் ஆங்கிலச் சொல்லுக்கு அறுவகைப் பொருளைத் தருகிறார்.

1. மனக்கண்ணில் பொருளைக் காணுதல்

2.உவமை, உருவகம் முதலியவற்றால் பொருள்களை உருவாக்கிக் காணுதல்.

3. பிறருடைய மனநிலையை - இன்ப துன்பங்களை உணர்தல்.

4. வெவ்வேறாக உள்ள பொருள்களை இயைத்துக் காணுதல்.

5.வாழ்க்கையின் அனுபவத்தை வெவ்வேறு வகையில் அமைத்துக் காணுதல்.

6.பொருள்களை உள்ளவாறே உணரும் போது மாறுபட்ட பொருள்களை நிறுத்திக் காணுதல். (இலக்கியத்திறன், பக்-106-107).

கற்பனை என்பது "கவிஞன் தான் கண்ட காட்சிகளைத் தன் விருப்பத்திற்கு ஏற்ப உருமாற்றிப் படைக்கும் செயல்திறன்"(அரங்க. சுப்பையா, இலக்கியத் திறனாய்வு இசங்கள் கொள்கைகள், ப.95) என்று அரங்க சுப்பையா கூறுகின்றார்.

கற்பனையின் வகைகள்

மேலைநாட்டு திறனாய்வாளர்களின் இலக்கியத் திறனாய்வுகளையே நமது இலக்கியப் படைப்பாளர்களும் பயன்படுத்தினர். வின்செஸ்டர் என்ற மேலை நாட்டுத் திறனாய்வாளர் கற்பனையை மூன்று வகையாகப் பாகுபடுத்தினார்.

1. படைப்புக் கற்பனை

2. இயைபுக் கற்பனை

3. கருத்து விளக்கக் கற்பனை

கருத்து விளக்கக் கற்பனை

இயல்பாக நிகழும் நிகழ்வின் மீது புலவன் தன்னுடைய கருத்தை ஏற்றிக் கூறுவது கருத்து விளக்கக் கற்பனையாகும். காலத்தின் நிலையை அறிய கடிகாரம் தேவை. பின்னாளில் நடக்கக் கூடியது இதுதான் என்றோ, எதிர்காலத்தின் நிலையையோ அறியத் தேவைப்படுவதுதான் காலக்கடிகாரம். இது ஒரு விசித்திரமான விளைவு. விசித்திரமான கோளாறுகளைப் பற்றி **"எதிர்த்திசையில் பின்னோக்கிச் சுழன்று கொண்டிருந்தேன் கடிகார முட்கள். அவள் ஒரு பௌதீக மாணவி என்பதால் அதைக் காலத்தின் பின்னோக்கிய பயணமாகக் கற்பனை செய்து கொள்ள வேண்டுமென்பதில்லை. கடிகாரத்தின் மின்னனுத் தொழில்நுட்பக் கட்டமைப்பில் ஏற்பட்டுவிட்டு விசித்திரமான கோளாறின் விளைவே அது"(வீடென்ப, ப.52)**

என விவரிக்கின்றார் தேவிபாரதி.

கதாப்பாத்திரங்கள் வெளிப்படுத்தும் கற்பனை

கதாப்பாத்திரத்தின் வழியே கற்பனைகளை 'வீடென்ப' எனும் சிறுகதைத் தொகுப்பில் பின்வருமாறு எடுத்துகாட்டுகின்றார் தேவிபாரதி. **"தான் அடைக்கப்பட்டிருந்த வார்த்தை விடுபட்டுள்ள மூட்டைப் பூச்சிகளும் கரப்பான் பூச்சிகளும் வாழும் கொட்டடியின் கம்பிகளின் உறுதியைச் சோதித்துப் பார்க்கவும் பூட்டின்**

திறவுகோலைக் கைப்பற்றுவதைக் குறிக்கும் பல கற்பனைகள் அவனுக்குத் தோன்றின" (மேலது, பக் .180-181) எனவும்,

கதை நாயகன் தான் அருகில் இல்லாத போது தன் காதலி வேறு ஒருவரோடு புணர்வது போல கற்பனையை தனக்குள் வளர்க்கிறான். "அவள் யாருடனாவது படுத்துக்கிடப்பதைப் பற்றிய கனவுகள் அவனை ஓயாமல் அலைக்கழித்துக் கொண்டிருந்தன. அந்த நபரை திடகாத்திரமானதொரு மனிதனாக அவன் கற்பனை செய்து கொண்டிருந்தான்" என்றும், "இரவுகளில் அவனுக்கு அவர்கள் திளைத்துக் கிடப்பது பற்றிய கற்பனைகள் பெருகும். கட்டுக்கடங்காத காமத்துடன் அவள் திடகாத்திரமான அந்த மனிதனின் உடலைத் தழுவிக் கொள்வது போன்ற துண்டு துண்டான சித்திரங்கள் தோன்றும்" என்றும், "வேறு யாருடையதொ போன்ற ஓர் உருவம் புகைப்படலமாக மனத்தில் தோன்றியது. பிறகு அவன் தான் புணர்ந்த பெண்கள் ஒவ்வொருவரது நிர்வாணத்தையும் அவசர அவசரமாகக் கற்பனை செய்ய முயன்றான்" (வீடென்ப, பக்.182 -184) என்றும் என காமத்தின் நிலையினைக் குறிப்பதாக அமைந்துள்ளது.

"தன்னை ஒட்டிக்கிடக்கும் புதிய கைதிகளின் உடல்கள் மீது மூர்க்கமாகப் பரவும் போது அவன் தன்னை மிகச்சுதந்திரமான மனிதனாகக் கற்பனை செய்து கொள்ளத் தொடங்கினான். பலவீனமான எதிர்ப்பதற்குச் சக்தியற்ற உடல்களின் மீது ஆதிக்கத்தைச் செலுத்துவதன் மூலம் தன் காலியான இதயம் மர்மமான விடுதலையுணர்வால் நிரப்பப்படுவதை உணர்ந்தான்" (வீடென்ப, ப-184) எனவும்,

“ஒவ்வொரு முறையும் அவனது உடலில் பொலிவு கூடிக் கொண்டிருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அவளது இளமை எதிர் கொள்வது அவனுக்காகக் காத்திருப்பதாகக் கற்பனை செய்து கொள்வது அவனுக்குப் பிடித்திருந்தது” (வீடென்ப, ப.186) என்றும் கற்பனைகளை வரிசைப்படுத்திக் காட்டியுள்ளார்.

நிழலின் தனிமை புதினத்தில் வரும் கருணாகரன் என்பவன் தாளமுடியாத அதிர்ச்சியோடு இருந்ததையும், மிருகத் தனமான வசையுடன் ஓடுவதைப் பற்றியும், **“புறப்படும்போது கருணாகரன் ஒரு ஐந்து ரூபாயத்தாளை அம்மாவிடம் நீட்டினான். நான் அதைத் தாளமுடியாத அதிர்ச்சியோடு பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் அதை மறுப்பதைப் பற்றியும் சுக்கல் சுக்கலாகக் கிழித்து அவனது அகந்தையுடன் சாறுவழியும் முகத்தில் வீசியடிப்பதைப் பற்றியும் அவனது மிருகத்தனத்தை விமர்ச்சிக்கும் காட்டமான வசையுடன் எங்களிருவரையும் இழுத்துக் கொண்டு அங்கிருந்து ஓடுவதைப் பற்றியும் கற்பனை செய்திருந்தேன்” (தேவிபாரதி, நிழலின் தனிமை, ப.21**) என்பதாக கற்பனை பற்றி விளக்குகிறார் தேவிபாரதி. கருணாகரன் கற்பனை செய்து பார்த்துக் கொலை செய்வதைப் பற்றி நினைத்துப் பார்த்துக் கொள்கிறான். மேலும் கருணாகரன் கடமையைப் பற்றி பின்வருமாறு கற்பனை செய்து பார்க்கிறான்.

“தீர்மானமானதொரு சொல்லை உச்சரிக்க விரும்புவது போல் அவனுடைய உதடுகள் குவிந்து கொண்டிருந்தன. எங்களுக்கிடையே தொடங்கியிருந்த சதுரங்கத்தில் அவன் தன் முதல் காயை நகர்த்துவதைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாக எண்ணினேன். ஒரு நேர்மையான ஆட்டக்காரனாகப் போதிய

அவகாசத்தையும் வாய்ப்பையும் அவனுக்கு அளிக்க வேண்டியது என் கடமை எனக் கற்பனை செய்து கொண்டேன்" (மேலது, ப-38). விளையாட்டிலும்கூட எதிர்ப்பக்கம் உள்ளவனுக்கும் வாய்ப்புத்தர வேண்டும் என நினைக்கின்றான் கருணாகரன். அதுவும் நேர்மையான முறையில் விளையாட வேண்டும் எனவும் நினைக்கின்றான். தன்னுடைய நேரமையான பண்பை முதலில் தனக்குள் கற்பனை செய்து பார்த்து, பின் செயல்படுத்துகிறான்.

இருவரும் விளையாட சம்மதித்த பின்பு விதியும் விளையாடுகின்றது. ஏனென்றால் கருணாகரன் பழிவாங்கத் துடிக்கும் ஆள் எதிர்பக்கம் உள்ளான் முதலாவதாக விளையாட்டில் அவனைப் பழிதீர்க்க வேண்டும் என நினைக்கின்றான். பிறகு அவனைக் கொல்லலாம் என நினைத்து வைக்கிறான். விதி விளையாடியதை, **"என் பழி மிருகம் பேராசையுடன் தன் நாவைச் சுழற்றத் தொடங்கியது. எவ்வித உணர்ச்சியையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் எனது சம்மதத்தைத் தெரிவித்துவிட்டு இருக்கைக்குத் திரும்பினேன். விசித்திரமான விளையாட்டொன்றை ஆடத் தொடங்கியிருக்கும் எனக்கும் அவனுக்குமான பொதுவான விதியின் முன்னால் இருவருமே பணிந்து நின்று கொண்டிருப்பதான கற்பனையில் மூழ்கத் தொடங்கியிருந்தபோது தொலைபேசி அழைத்தது" (மேலது, ப.39)** என்பதின் வழியாக விளக்குகிறார்.

கதை சொல்லியானவன் கருணாகரனைக் கொலை செய்ய பலமுறை முயற்சி செய்கிறான். முப்பது வருடங்களுக்கு முன் அதாவது கதைசொல்லி சிறுவயதாக இருக்கும்போது அவனுடைய அக்கா பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறாள். அதனால்தான்

கருணாகரனைப் பழி தீர்க்க பலமுறை முயற்சியெடுக்கிறான். கற்பனைக்குள் மனதை கொண்டு செல்கிறான்.

கௌதமன் மகன் உருவ அமைப்பு

கௌதமன் மகனின் உருவ அமைப்பைப் பற்றி கருணாகரன் கற்பனை செய்து பார்க்கிறான். கௌதமன் மகன் நிழல்களின் குற்றவாளியாகவும் காட்சியளிக்கிறான் என்பதை, **"அவனது கழுத்தில் சுற்றியிருந்த பிரேஸ்லெட்டும், விரல்களில் தென்பட்ட ஆபாசமான மோதிரங்களும் அவன் ஒரு உருப்படாத பிறவி என்பதற்கான ஆதாரங்களாக எனக்குத் தென்பட்டன. அவனுக்கென்று பால்வண்ண நிறத்தில் ஒரு சிறிய காரும் மோட்டார் சைக்கிளும் இருந்தன. எந்தச் சத்தத்தையும் எழுப்பாத அந்த வாகனங்களைப் பார்த்தபோது வீட்டுக்கு வெளியிலான அவனது உலகின் நிழல் குற்றங்களின் அச்சில் சுழலும் ஒன்றாகவே இருக்கும் எனக் கற்பனை செய்து கொண்டேன்" (மேலது, ப.**43) என்பதாக விளக்குகிறார் தேவிபாரதி.

கௌதமனின் உருவ அமைப்பானது பெரிய பணக்காரன் போல காட்சி அளிக்கிறான். மேலும் அவன் தான் நினைத்த பழியின் ரகசியங்களைத் தெரிந்து கொண்டானோ எனவும் கற்பனை செய்து பார்க்கிறான். கருணாகரன் கையில் இருந்த துப்பாக்கி அவனைப் பரவசத்தில் ஆழ்த்துவது போல் உள்ளது.

விளைவுகளைக் கற்பனை செய்து பார்த்தல்

"நட்ராஜ் மகராஜ் நாவலில் கதாபாத்திரங்களின் பெயர்களை ஒற்றை எழுத்தில் பயன்படுத்தியுள்ளார். இது ஒரு தனித்துவமான

உத்தி. அதில் ‘ம’ என்று ஒரு கதாபாத்திரத்தைப் படைத்து அவரின் வழி கற்பனையைக் கட்டமைக்கிறார்.

‘ந’ என்பவன் மாவீரன் காளிங்க நடராஜனின் உடைகளையும் கவச குண்டலங்களையும் உடுத்தினால் தான் என்னவாகப் போகிறது. விளைவினைப் பற்றி ந, உடை மாற்றும் அறைக்குச் சென்று தான் வெறும் ந, வாக அங்கே வந்து சேர்ந்தபோது உடுத்தியிருந்த வேட்டி, சட்டைகளைத் தேடினான். அங்கே எஞ்சியிருந்தவை இரண்டு அழுக்கு வேட்டிகளும், துவண்டுபோன ஒரு கைத்தறிச் சட்டையும் மட்டுமே. நிச்சயமாக அவற்றில் எதையும் உடுத்திக் கொண்டு வெளியே தலைகாட்ட முடியாது. மாவீரன் காளிங்க நடராஜ மகராஜாவின் பட்டுப் பீதாம்பரங்களுடனும் கவச குண்டலங்களுடனும் போனால் தான் என்ன? அதன் விளைவுகளைப் பற்றிக் கொஞ்சம் கற்பனை செய்ய முயன்றான் ந” (தேவிபாரதி, நட்ராஜ் மகராஜ், ப.299) என நினைத்துப் பார்க்கிறான் ந.

ந என்பவன் தான் ஒரு அரச குடும்பத்தைச் சார்ந்தவன் என நினைத்துக் கொண்டே இருக்கிறான். எல்லாரிடமும் அதையே சொல்லியும் வைத்துள்ளான். வரலாற்றினை மீட்டெடுக்கச் சென்ற இடத்தில் உடை மாற்றும் அறையில் மாட்டிக் கொள்கிறான் ந. அப்போது தான் உடுத்தி வந்த ஆடையை மறந்து ராஜாவின் உடையையும், கவச குண்டலத்தையும் அணிந்து சென்றால் என்னவாகும் எனக் கற்பனை செய்து பார்க்கிறான்.

ந என்பவன் ஓவியர்களின் கைவண்ணத்தை எண்ணி மெச்சுகிறான். ஓவியர்கள் ஓவியங்களை நேரடியாகக் காட்சியைப்

பார்த்தே வரைவார்கள். ஒரு சில நேரங்களில் கற்பனையோடு கலந்து வரைவதும் உண்டு. பெரும்பாலும் கண்ட காட்சியையோ காணும் காட்சியையோ தத்ரூபமாக வரைவதுதான் இவர்களின் வேலை. அதனை ந நினைத்து கற்பனைக் கொள்வான். அதாவது எடுபிடி வேலை செய்ய வந்த ந கதை சொல்ல வந்தவளை அணைத்தது போல இருக்கிறது. இது ஒட்டு வேலையாகத்தான் இருக்கும் என்று கற்பனை செய்கிறான்.

“ந ஒரு போதும் பேரழகி ஸ்யையோ அவளைப் போன்ற தோற்றமுள்ள அந்தக்கதை சொல்லியையோ அந்தக் கூடத்தில் பார்த்ததில்லை. அவளை அணைத்துக் கொண்டு நின்றதுமில்லை. வெறும் ஒட்டுவேலை தன்னையும் அவளையும் தனித்தனி ஓவியங்களாக வரைந்து பிறகு இணைத்திருக்கக்கூடும். பொய்கையும் புள்ளிமான்களும் பஞ்சவர்ணக்கிளிகளும் அந்த ஓவியர்களின் கற்பனை” என ஓவியர்களின் கற்பனையை நினைத்துப் பார்க்கிறான் ந. ஓவியர்களின் வேலையே கற்பனை கலந்ததுதான். அதுவும் பொய்கை புள்ளிமான்கள், பஞ்சவர்ணக் கிளிகள் என அனைத்தையும் கற்பனை கலந்து வரைந்துள்ளனர். அதோடு கூடு கதைசொல்லியாக வந்தவளையும், ந வையும் சேர்த்து இணைத்து வைத்து வரைந்திருக்கக்கூடும் எனவும் கற்பனை செய்து பார்க்கிறான். கதாப்பாத்திரங்கள் வழியாக மனிதர்களின் மனநிலை, உளவியல் போராட்டங்கள், தார்மீகக் குழப்பங்கள் ஆகியவற்றை தேவிபாரதி தனது கற்பனைத் திறன் மூலம் வெளிப்படுத்திகிறார்.

முடிவுரை

தேவிபாரதி அவர்கள் தன் படைப்புகள் வழி வரலாற்றை பதிவு செய்து வரலாற்றில் மறைக்கப்பட்டப் பக்கத்தையும் அவ்வரலாற்றின் மீட்டுருவாக்கச் சிந்தனையையும் ஒரு மனிதனின் வாழ்வில் வரலாற்றின் தாக்கத்தையும் ஒவ்வொருவரும் தன் வாழ்வின் முன்னோக்கிய வரலாற்றை அறிந்து கொள்ளவேண்டிய அவசியத்தையும் வரலாறு மீட்டுருவாக்கம், சமகாலமும் சுயசரிதையும் காட்டும் பதிவுகள் ஆகிய தலைப்புகள் வழி அறியமுடிகிறது. வாழ்வின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தனகுள் தோன்றும் கற்பனைகள் தன்னைத் தானே நல்வழிப்படுத்திக் கொள்ளும் திறனாக இருத்தல் வேண்டும். படைப்பாளன் தான் எண்ணிய கருத்தினை கதாப்பாத்திரங்களின் துணைகொண்டு கற்பனை நயத்துடன் சூழ்நிலைகளுக்கு ஏற்ப கற்பனை எவ்வாராக அமைகிறது என்பதை தெரியப்படுத்துகிறார். ஒரு செயலைச் செய்வதற்கு முன் அச்செயலை செய்தப்பின் வரும் விளைவுகளைக் கற்பனை செய்து பார்த்தல் வேண்டும். செயல்கள் மூலம் வரும் விளைவுகள் வாழ்வில் ஒரு முக்கியப் பங்கினையும் திருத்தத்தையும் கொடுக்கக் கூடியது என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

பயன்பட்ட நூல்கள்

1. **அரங்க சுப்பையா, இலக்கியத் திறனாய்வு இசங்கள், கொள்கைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை - 600014, எட்டாம் பதிப்பு, ஜீலை 2016.**
2. **சுவாமிஜி இறையன்பன், திருமந்திரம் மூலமும் உரையும், கற்பகம் பப்ளிகேஷன்ஸ், படூர் கூட் சாலை, மாங்காடு, சென்னை** – 600122.
3. **நட்ராஜ் மகராஜ் (நாவல்), காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்**, 669, **கே.பி.சாலை, நாகர்கோவில்** - 629001, **முதற்பதிப்பு, மே** 2016.

4 . நிழலின் தனிமை(நாவல்), காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், 669, கே.பி.சாலை, நாகர்கோவில் - 629001. முதற்பதிப்பு, டிசம்பர் 2011.

5 . புழுதிக்குள் சில சித்திரங்கள், காலச்சுவடு பதிப்பகம், (கட்டுரைகள்) 669,
கே.பி.சாலை, நாகர்கோவில் - 629001. முதற்பதிப்பு, மார்ச் 2004.

6 . வீடென்ப (சிறுகதைகள்) காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, நாகர்கோவில் - 629001. முதற்பதிப்பு 2013.